பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 21 செவ்வாய்க்கிழமை 04.02.2025 கதிர் 088

### இனி இது ரகசியம் அல்ல!

மகிந்த குடும்பத்திற்கும் ஆளும்தரப்புக்கும் இடையில் ஒரு பனிப்போர்மூண்டுள்ளது.மகிந்தவிற்கு முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட ☞ 2

# தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டது

## ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் நேற்று அரச தகவல் திணைக்களத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்வாக்கெடுப்புதினத்தன்று அரச சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் உட்பட சுகாதார சேவையாளர்கள் என அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பலர் வாக்களிக்காமல் தமது சேவைகளில் ஈடுபடுகிறார்கள்.

வாக்களிப்பு தினத்தன்று அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் துறையின் சேவையாளர்களுக்கு தபால்மூல வாக்களிப்புக்கு அனுமதியளிக்குமாறு தேர்தல் முறைமை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றும் குழுக்களிடம் பலமுறை யோசனைகளை முன்வைத்துள்ளோம். அவை இதுவரை ஏற்கப்படவில்லை.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உத்தியோகபூர்வ பெறுபேற்றை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் இந்த யோசனைகளை முன்வைத்தோம். இந்த யோசனைகளை ☞ 2

# ஜனாதிபதி அநுரவின் சுதந்திர தினச் செய்தி



தேசிய மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம் என்று தனது சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க.

அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று நாம் 77 ஆவது தேசிய சுதந்திர தினத்தை ஒரு புதிய சுதந்திரத்திற்கான எதிர்பார்ப்புடன் கொண்டாடுகிறோம். நாம் தற்போது, இலங்கையின் வரலாற்றை மாற்றியமைத்து, ☞ 2

# சிறீ லங்கா சுதந்திர தினத்தை தமிழர்கள் ஏற்பது கிடையாது

## இன்றைய கரிநாள் போராட்டம் என்கிறார் கஜேந்திரகுமார்



சிறீ லங்காவின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேச மக்கள் சுதந்திர தினமாகக் கருதுவது கிடையாது. அதனை முன்னிறுத்தி இன்று நடைபெறவுள்ள கரிநாள் போராட்டங்களில் தமிழ்த் தேசிய முன்னணி கலந்துகொள்ளும் என்று கட்சித்தலைவரும் நாடாளுமன்ற ☞ 2

# இந்திய மீனவர் 10 பேருக்கு விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் பெப்ரவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அத்துமீறி நுழைந்து மன்னார் கடற்பரப்பில் இழுவைப் படகு ஒன்றில் மீன் பிடித்துக்கொண்டிந்த 10 இந்திய மீனவர்களை நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தாழ்வுபாடு கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர். ☞ 2

# வடக்கு கிழக்கிற்கு ஜப்பான் கழிவகற்றல் வாகனங்கள்

## ‘கிளீன் சிறீலங்கா’ திட்ட உதவி



**ஜப்பான் அரசு ’கிளீன் சிறீலங்கா’ திட்டத்திற்கு உதவும் வகையில் 300 மில்லியன் யென் நிதி உதவியை இலங்கைக்கு வழங்குகின்றது. இதன் கீழ் மேற்கு மாகாணத்திற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் 28 கழிவகற்றல் வாகனங்கள் வழங்கப்படவுள்ளனர். கிழக்கிற்கு 8 வாகனங்களும் வடக்குக்கு 6 வாகனங்களும் வழங்கப்படவுள்ளன.**

**இது தொடர்பான ஒப்பந்தம் நேற்றுச் கைச்சாத்திடப்பட்டது.**

**இந்த மானிய உதவிக்கான** ☞ 2

# டிஜிட்டல் கொடுப்பனவு யுகத்தின் ‘கௌபே’ திட்டம் பெப். 7 ஆரம்பம்

டிஜிட்டல் கொடுப்பனவுகளில் புதிய யுகத்தை குறிக்கும் வகையில் கௌபே (Govpay) திட்டம் பெப்ரவரி 7 முதல் தொடங்கும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரச சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தொடக்க நடவடிக்கையாக கௌபே திட்டத்தை அறிமுகப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதன் பூர்வாங்க நிகழ்வு பெப்ரவரி 7 ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் முறை மூலம் தடையின்றிக் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடியவாறு, இத்திட்டத்தின் ஊடாக அரச நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை சீரமைத்து நவீனமயப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

# கோட்டாவைக் கைது செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கையாம்

## பதறுகிறார் உதய கம்பன்பில

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்குப் பின்னால் ஒரு புதிய தலைமை சூத்திரதாரியை உருவாக்க ஆளும்தரப்பு விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் நேற்று தனது அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு ஆரம்பத்தில் உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்தது. எனினும் நிர்வாகத்தில் உள்ள சில நபர்களும் அந்தக் குற்றங்களோடு சம்பந்தப்பட்டிருப்பதால், பொது ☞ 2

# அரச கிடங்குகளில் பாவனைக்குதவா 1,600 தொன் உணவுப் பொருட்கள்

## சுகாதாரத்துறை அறிவிப்பு

உணவுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நாடு முழுவதும் உள்ள கிடங்குகளில் உள்ள 1,623 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களை மனித நுகர்வுக்கு ஏற்றதல்ல என அறிவிக்க சுகாதாரத் துறை பரிந்துரைத்துள்ளதாக உணவு ஆணையர் உபுல் சாந்த டி அல்விஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் 2022 ☞ 2

# பாதுகாப்பு அமைச்சரின் எம்.பி. பதவியை பறிக்கக் கோரி நீதிமன்றில் மனு தாக்கல்

பாதுகாப்பு அமைச்சரின் நாடாளுமன்றப் பதவியைப் வறிதாக்குமாறு உத்தரவிடக்கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் அரசமைப்பைமீறிச்செயற்பட்டார் என்று அந்தமனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த 'ரிட்' மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அமைச்சர் ஜனாதிபதி செயலகத்தின் உறுப்பினர் பதவியையும் வகித்து, நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார், இது அரசமைப்புக்கு முரணானது என்று மனுவில் ☞ 2

# அரச கட்டமைப்புகளின் காணி அபகரிப்பால் மக்கள் குடியிருக்கக் காணிகள் இல்லா நிலை

## முல்லைத்தீவின் அவலத்தை சுட்டிக்காட்டும் ரவிகரன் எம்.பி.

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர், வன இலாகா, வன உயிரிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மக்களுக்குரிய காணிகளை தொடர்ந்தும் அத்துமீறி அபகரிப்புச் செய்வதால், மக்கள் குடியிருப்பதற்கே காணிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 255 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு காணியில்லை என முறையிடப்பட்டது. இந்நிலையில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வீட்டை அவரிடமிருந்து பிடுங்குவதற்கு ஆளும்தரப்பு முயற்சிப்பதிலிருந்து இந்தப் பனிப்போர் தொடர்கின்றது.

மகிந்தவைவீட்டைவிட்டுவெளியேறுமாறு ஆளும்தரப்பு உத்தரவிடவில்லைஎன்றாலும் அதை முன்வைத்து ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் தொடர்ந்து ஒரு பரப்புரைப் போரை முன்னெடுத்து வருகின்றார்கள். இதன் மூலம் மகிந்த அந்த வீட்டைவிட்-டுத் தானாகவே வெளியேறவேண்டும் என்கிற சூழலை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

மகிந்தமற்றும்பொதுஜனபெரமுனதரப்பில் இதனையே ஆளும்தரப்புக்கு எதிரான ஒரு விடயமாகத்திருப்பும்அரசியல்தந்திரோபாயம் வெளிப்படையாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் முடிந்தால் மகிந்தவை அந்த வீட்டிலிருந்து கிளப்பிப் பாருங்கள் என்று சவால் விட்டாலும் ஆட்சியாளர்களுக்குப் பதிலடி வழங்குவதிலும் அவர்கள் கவனமாக இருக்கின்றார்கள்.

இதனால், மகிந்தவின் பாதுகாப்பைக் குறைத்தது மற்றும் இப்போது மகிந்தவை அரச வீட்டிலிருந்து வெளியேற்றுவது ஆகியவற்றில் முன்னிற்கும்பாதுகாப்புஅமைச்சருக்குஎதிராக, அவரை நாடாளுமன்றப் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கான வழக்கை பொது ஜன பெரமுன தாக்கல் செய்துள்ளது. ஏற்கனவே மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதற்கான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், இந்த வழக்கு பாதுகாப்பு அமைச்சரை இலக்கு வைத்து போடப்பட்டுள்ளது.

மகிந்தவை இலக்கு வைத்தால் பதிலடி தவறாது என்ற செய்தியை இதன் மூலம் வழங்கப்படார்கின்றது மகிந்த தரப்பு. ஆளும் தரப்பு பதிலுக்கு என்ன செய்யப் போகின்றது என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில்தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதாரமேம்பாட்டுபிரதிஅமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ மற்றும் ஜப்பானின் வெளியுறவுக்கான நாடாளுமன்ற துணை அமைச்சர் அகிகோ இகுயினா ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் குறிப்புகளில் இலங்கைக்கான ஜப்பானிய தூதர் அகியோ இசோமாட்டா மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டுஅமைச்சின்செயலாளர்சிறிவர்தன ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த மானிய உதவியின் கீழ், ஜப்பானிய நிறுவனங்களால் தயாரிக்கப்படும் 28 உயர்தர குப்பை அகற்றும் இயந்திரங்கள், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய திடக்கழிவு மேலாண்மை ஆதரவு மையம் (NSWMSC) மூலம் மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படும்.

இந்த 3 மாகாணங்களிலும் கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்துத் திறனை மேம்படுத்துவதையும், சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான கழிவு மேலாண்மையை உறுதி செய்வதையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கழிவுகள் குவிவதையும், பொது சுகாதாரம் மற்றும் காற்றின் தரத்தில் அதன் தாக்கத்தையும் சமாளிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த ஜப்பான், மேல் மாகாண திடக்கழிவு மேலாண்மை பெருந்திட்ட உருவாக்கம் உட்பட கழிவுகளை அகற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

இலங்கையின் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஜப்பானின் நீண்டகால அர்ப்பணிப்பை இந்த சமீபத்திய உதவி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## சிறீ லங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர்நேற்றுயாழ்ப்பாணம்கொக்குவிலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறீலங்காவின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேச மக்கள் சுதந்திர தினமாகக் கருதுவது கிடையாது.

சிறீ லங்காவிற்கு சுதந்திரம் கிடைத்த பின்னர்கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பை தமிழ் மக்கள் நிராகரித்தே வந்திருக்கின்றனர். அந்தஅரசமைப்புக்கள்மூன்றும்ஒற்றையாட்சி அரசமைப்பின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதைதமிழ்மக்கள்நிராகரித்திருந்தனர்.

அதேபோன்ற புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் நடவடிக்கைகள்தான் இப்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான ஒற்றையாட்சி அரசமைப்பை தமிழ் மக்கள் எப்போதும் நிராகரிப்பார்கள்.

அடிமைச்சாசனத்தின் அடையாளமாக இருக்கின்றஒற்றையாட்சிஅடையாளங்களை நிராகரிக்கிற அதேவேளையில் தமிழில் தேசிய கீதம் பாடுவதால் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறானநிலைமையில்சிறிலங்காவின் சுதந்திர தினத்தை கரி நாளாகத்தான் பார்ப்பது எம்முடைய மரபாக இருக்கிறது.

அந்த வகையில் சிறிலங்காவின் சுதந்திர நாளை கரிநாளாக தமிழ் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.அதன் அடிப்படையில் தமிழர் தாயக நிலப்பரப்பில் நாளை கரிநாள் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்தப் போராட்டங்களில் நாங்களும் கலந்து கொள்ளவுள்ளோம் - என்றார்.

இதேவேளை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் நாளையதினம் கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் கட்சி பேதங்களுக்கப்பால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும்அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் மீதமுள்ள 1,623 மெட்ரிக் டன் பொருட்களை சுகாதாரத் துறை மற்றும் ஆய்வக சோதனைக்கு அனுப்ப ஒக்டோபர் 2024 இல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆய்வுக்குப் பிறகு, ஜனவரி மாதம் அந்தப் பொருட்கள் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றவை என்று அறிவிக்கப்பட்டதாகவும், வெளிநாட்டிலிருந்தும் உள்ளூரில் இருந்தும் பெறப்பட்ட பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அல்விஸ் கூறினார்.

உலக உணவு அமைப்பிலிருந்து பெறப்பட்ட உணவை சேமித்துவைப்பதற்காக வேயங்கொடை கிடங்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சமூக வலுவூட்டல் அமைச்சகம் மற்றும் உலக உணவு அமைப்புக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பொருட்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

நாடு முழுவதும் 103 கிடங்குகளை உணவுத் துறை கட்டுப்படுத்துவதாகவும், இந்தக் கிடங்குகள் சதோசா, மாநில வணிகப் பலவகை கூட்டுத்தாபனம் மற்றும் சுங்கம் போன்ற அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதாகவும் உணவு ஆணையர் உபுல் சாந்த டி அல்விஸ் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என அனைத்து மக்களாலும் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் ஆளும்தரப்புடன் புதிய பாதையில் நுழைந்துள்ளோம். கடந்த நூற்றாண்டில் நாம் இழந்த மற்றும் தவறவிட்ட வளமான நாட்டையும்-ஒருஅழகானவாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சவாலுடன் நாம் அனைவரும் இப்போது ஒன்றாக போராடுகிறோம்.

நமது எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை புதிய நிலைக்கு உயர்த்த வேண்டும். இரத்தம், கண்ணீரால் போராடிய வரலாற்றின் அனைத்து தலைவர்களினதும் தியாகத்தின் எதிர்பார்ப்பு அதுவேயாகும். அதற்கிணங்க, நாம் தனித்தனியாகவும், கூட்டாகவும், ஒருங்கிணைந்த சமூகக் கட்டமைப்பாக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கநெறியூடாக அபிவிருத்தியடைந்த நவீன இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

புதிய ஆளும்தரப்பு என்ற வகையில், கடந்த நான்கு மாதங்களில், வலுவான பொருளாதார அடிப்படையில் நாட்டை உறுதிப்படுத்தல், புதிய அரசியல் கலாசாரத்தை நடைமுறைப்படுத்துதல், அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பிலான புதிய முன்னுதாரணத்துக்காக அர்ப்பணித்தல், இனவாதம்,மதவாதம் இன்றி மற்றவர்களை சமத்துவம், கௌரவம்,கரிசனையுடன் பார்ப்பது, நடத்துவது மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல், ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

கிராமப்புற வறுமையை ஒழித்தல் உள்ளிட்ட முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கானஎமதுகொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை உறுதிப்படுத்தி, பாதிக்கப்பட்டமற்றும்பாதிக்கப்படக்கூடியசமூகக் குழுக்களை கைவிடாத அணுகுமுறையை உறுதிப்படுத்தும் நலன்புரி பொறிமுறையை உருவாக்குதல்,நாம்தவறவிட்டபுதியஅறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் அடைந்துகொள்ள பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்க தேவையான முதல் நடவடிக்கைகளை எடுத்தல், ஊழல் ஆட்சியாளர்கள் நிறைந்த நாடு என்று முன்பு காணப்பட்ட பிம்பத்தை தவித்து, உலகின் அனைத்து நாடுகளுடனும், நாடுகளுடனும் மிகவும் நம்பகத்தன்மையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய நாடென சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையை மீள அடையாளப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

இவ்வாறாக, ஊழல் ஆட்சியாளர்களின் ஆயிரம்அவதூறுகள்மற்றும்இடையூறுகளுக்கு மத்தியில் இந்த நாட்டின் பொது மக்களால் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் அரசாங்கம் சீராக முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. எமது வாக்குறுதியின்படி இலங்கையை தேசிய மறுமலர்ச்சி யுகத்தை இட்டுச் செல்வதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். அதன்படி, மேற்கூறிய அடிப்படையில், பல நூற்றாண்டுகளாக நாம் கண்ட கனவை நனவாகிக்கொள்ள வரலாற்றில் மிகவும் ஆக்கபூர்வமான பணிகளை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

அதற்காக, அனைத்து இலங்கை மக்களையும் உறுதி மற்றும் நம்பிக்கையுடன் அணிதிரளுமாறும், 77ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், சுதந்திரத்தின் நவீன முன்னுதாரணத்தைகட்டியெழுப்பும்பணியில் இணையுமாறும், மறுமலர்ச்சி யுகத்திற்கான புதிய திருப்பத்துடன் கூடிய கூட்டு முயற்சியில் இணையுமாறும், அனைத்து இலங்கை மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது.

## கோட்டாவைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைத் தவறாக வழிநடத்த ஒரு மாற்றுக் கதை உருவாக்கப்படுகின்றது.

உண்மையிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் இன்னும் நிர்வாகத்திற்குள் இருப்பதால், ஒரு புதிய பிரதான சூத்திரதாரியை உருவாக்குவதற்கான திட்டத்தில் ஆளும்தரப்பு இப்போது ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக முன்னாள் புலனாய்வுத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் குறிவைக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்மை பயக்கும் வகையில் இலங்கையின் புலனாய்வுப் பிரிவு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளைச் செய்தது என்ற தவறான கூற்றை நிறுவுவதே இதன் நோக்கம் என்று கம்மன்பில தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, விமானப்படையின் முன்னாள் தளபதி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகியோர் உள்ளிட்ட மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக் குழுவை கம்மன்பில மேற்கோள் காட்டினார்.

இலங்கையின்புலனாய்வுஅமைப்புகளைக் குண்டு தாக்குதல்களுடன்இணைக்கும் வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த சேனல் 4 ஆவணப்படம் செய்த குற்றச்சாட்டுகளை அந்த குழு நிராகரித்ததாக உதய கம்மன்பில கூறினார்.

ஆளும்தரப்புஅறிக்கையைப்புறக்கணித்து தவறான கதையை முன்வைப்பதாக கம்மன்பில குற்றம் சாட்டினார். ஆளும்தரப்பு சதித்திட்டத்தில் முக்கிய சாட்சியாகக் கூறப்படும் அசாத் மௌலானா, மோசடி மற்றும் அடையாள மோசடி உள்ளிட்ட பல குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மௌலானாவின் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைக் கட்டுப்படுத்து ஸவதோடு புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் இலங்கைக்குத் திரும்புவதற்கு ஆளும்தரப்பு உதவுகின்றது என்றும் கம்மன்பில கூறினார்.

## பாதுகாப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதிர் உட்பட மூன்று பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஆனந்த விஜேபால டிசம்பர் 10, 2024 அன்று ஜனாதிபதி செயலகத்தின் தலைமைப் பணியாளராக நியமிக்கப்பட்டார் எனவும், பின்னர் டிசெம்பர் 18 அன்று நியமிக்கப்பட்டார் எனவும் சுட்டிக்காட்டும் மனு, அந்தப் பதவியில் இருக்கும்போதே அவர்நாடாளுமன்றவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார் என்று சுட்டிக்காட்டுகின்றது. .

ஜனாதிபதி செயலகத்தின் தலைவராக ஆனந்தவிஜேபாலஆளும்தரப்புடன்பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்ய வேண்டியவராக இருப்பதால்,இருபதவிகளிலும்இருக்கும்போது ஒப்பந்தங்களில் செல்வாக்கு செலுத்தும் திறன் அவருக்கு இருப்பதாகவும், அரசமைப்பின் 91ஆவது பிரிவின்படி இது தவறு என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொது சேவையில் பதவி வகிக்க முடியாது. அதன்படி, அமைச்சர் ஆனந்த விஜேபால சம்பந்தப்பட்ட பதவியை வகித்தமை அரசமைப்பிற்கு முற்றிலும் எதிரானது என்றும் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆனந்த விஜேபால சம்பந்தப்பட்ட பதவியை வகிப்பது சட்டத்தின் ஆட்சி, மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்களின் தனியுரிமையை மீறுவதாகும் என்று சுட்டிக்காட்டிய மனுதாரர், பிரதிவாதி நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்படுவதைத் தடுக்க இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் கோரியிருக்கிறார். மேலும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்யுமாறும் கேட்டுள்ளார்.

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் மதியம் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தினார்.

## தேர்தலுக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவதற்கு தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம்மேற்கொள்ளவேண்டும். அதற்கான அழுத்தத்தை தொடர்ந்து பிரயோகிப்போம்.

உள்ளூர் அதிகார சபைகள் ( விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு அமைவாகவே செயற்பட முடியும். உள்ளுராட்சிமன்றத்தேர்தலுக்குதேவையான நிதிஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவேநீதிமன்றத்தின் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்போம் என்றார்.

## ரவிகரன் எம்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத்

தொடர்ச்சி 8 ம் பக்கம்..

காலைக்கதிர் Kalaikkathir

# திஸ்ஸ விகாரை காணி உரிமையாளர்கள் என்னிடம் மாற்றுக் காணியே கேட்டார்கள்

## வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச்சொந்தமானஅயலிலுள்ளகாணியையும் மாற்றீடாக தமக்கு வழங்க வேண்டும் என தன்னிடம் கோரியிருந்தனர் என வடமாகாண ஆளுநர் நா, வேதநாயகன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தையிட்டியில் தற்போது திஸ்ஸவிகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது விகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர்.

திஸ்ஸவிகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்கவேண்டும் எனக் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்திவருகின்றார்.

அத்துடன் இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திஸ்ஸ விகாரையை அகற்றி, அந்த காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்த போது, ஆளுநர் குறித்த காணி உரிமையாளர்கள் மாற்று காணியை கேட்டுள்ளதாக குறிப்பிட்டார். குறித்த விடயம் சமூகவலைத்தளங்களில் விமர்சனத்திற்கு உள்ளான நிலையில், அதனை தெளிவு படுத்தும் முகமாக ஆளுநர் குறித்த செய்தி குறிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவபூமி திருக்குறள் வளாகம் யாழ். மாவிட்டபுரத்தில் திறப்பு

சிவபூமி அறக்கட்டளையினரால், யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் நிறுவப்பட்டுள்ள சிவபூமி திருக்குறள் வளாகம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் குறித்த திருக்குறள் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு 1,330 திருக்குறளும் கருங்கல்லில் கைகளால் செதுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, திருக்குறள் ஆராய்ச்சி நூலகம், தியான மண்டபம், ஆய்வாளர்கள் தங்கும் வசதிகள் என்பன அங்கு அமைக்கப்பட்டுள்ளன.



# போதைப் பொருள் விற்பனைசெய்த ஒருவர் வவுனியா பொலிஸ் சுற்றி வளைப்பில் கைது

வவுனியா பொலிசாரின் திடீர் சுற்றி வளைப்பில் வைரவபுளியங்குளம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து போதைப் பொருள் விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் விசேட பொலிஸ் குழு வவுனியா, வைரவபுளியங்குளம், ரயில் வீதி ஒன்றில் தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த சிறிய வெற்றிலை கடை ஒன்றை சுற்றி வளைத்து திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வர்த்தக நிலையத்தில் விற்பனைக்கு தயாராக இருந்த 140 கிராம் மாபா, ஒரு கிலோ மாபா கலந்த பாக்கு உள்ளிட்ட போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்தை நடத்தியர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

100

# ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் 05 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

காலஞ்சென்ற சிரேஷ்ட ஒலிபரப்பாளர் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் 05 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவுடன் ஏ.ஆர்.எம். அட்வர்டைசிங் அனுசரணையில் ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் யூ.எல். யாக்கூப் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அரசமைப்பு பேரவை உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகவும் முன்னாள் அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா கௌரவ அத்தியாகவும் கலந்துகொண்டனர்.

அத்துடன் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஸிக், மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம். ஹனீபா, அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹீர், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எம்.ஏ. ரஸாக், பிறை எப்.எம். பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், அதிபர் யூ.எல். நஸார், சிரேஷ்ட ஒலிபரப்பாளர்களான சட்டத்தரணி ஏ.எம். தாஜ், ஏ.சி. றாஹில், என்.றபீக் மற்றும் கவிஞர் எம்.எம்.எம். பாஸில் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதன்போது ஊடக, கல்வி மற்றும் அரசியல் துறைகளில் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் வகிபாகம், அர்ப்பணிப்புடனான உன்னத சேவைகள் பற்றியும் அவரது ஆளுமைகள் மற்றும் சிறப்புகள் குறித்தும் அதிதிகள் நினைவுகூர்ந்தனர்.

நிகழ்வின் ஓர் அங்கமாக மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் சகோதரரான சிரேஷ்ட ஒலிபரப்பாளர் ஏ.ஆர்.எம். நௌபீலை பணிப்பாளராகக் கொண்ட றிஸாலத் இணைய தொலைக்காட்சியின் விஸ்தரிப்பை மையப்படுத்தி அதன் ஆலோசனை சபையினருக்கான அடையாள அட்டையும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், அரசியல்வாதிகள், கல்வியியலாளர்கள் மற்றும் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் உறவினர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சியாளர்களும் கரிநாளும்

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துதேர்ந்தெடுத்தஆளும்தரப்புதன்னுடையது என்று மேடைக்கு மேடை பெருமை பேசி வருகின்றார் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க. அவர் சொல்வதுமட்டுமேஉண்மையில்லைஎன்பதைஇன்றைய நாள் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. இலங்கையின் சுதந்திரதினமான இன்றைய நாள் தமிழர் தாயகத்தில் கரிநாளாகவே கடைப்பிடிக்கப்படுகின்றது. கடந்த 75 வருடகால வரலாற்றில் எந்த மாற்றமும் இல்லை என்பதையே இது உணர்த்துகின்றது.

ஒட்டுமொத்த இலங்கையர்களும் மாற்றத்தை எதிர்பார்த்தபோது தமிழர்களில் ஒரு பகுதியினரும் மாற்றத்தை எதிர்பர்த்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்றாலும், பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான தமிழர்களின் குரல் ஒய்வதற்கான வாய்ப்புக்களை இதுவரையில் அந்த மாற்றம் ஏற்படுத்தவில்லை அல்லது அதற்கான அறிகுறிகளை ஏற்படுத்தவில்லை என்பதையே இன்றைய நாள் எடுத்துக்காட்டுகின்றது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையில் தமது ஆக்கிரமிப்பை முடிவுறுத்தி வெளியேறிய நாள் இன்று. தாம் வெளியேறியபோது இந்த நாட்டை சிங்களத் தலைவர்களிடம் அவர்கள் ஒப்படைத்துச் சென்றனர். அதற்கு முன்னர் இந்த நாடு வரலாற்றின் பல்வேறு பக்கங்களிலும் பல துண்டுகளாக பல மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. வரலாற்றின் சிலகாலங்களில் மட்டுமே அரிதாக அது ஒரே மன்னராட்சியின் கீழ் இருந்துள்ளது. பிரிட்டிஷார் இந்த நாட்டிற்குள் நுழைகின்றபோதும் ஐரோப்பியர்கள் நுழைந்தபோது பல ஆட்சிப் பரப்புக்களாக இருந்த நாட்டை ஒருங்கிணைத்து தமது ஒரே ஆட்சிப்புலமாக்கிய பிரிட்டிஷார், தாம் வெளியேறிபோது அதனை அப்படியே சிங்களவர்களின் கைகளில் ஒப்படைத்தனர். தாம் வந்தபோது, பல ஆட்சிப்புலங்களாக இருந்த நிலத்தை ஒன்றாக்கி ஒரு தரப்பினரிடம் கையளித்தபோது அதற்குள் அடங்கிய தமிழர்களின் நலன்கள் குறித்தும் தம்மால் அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்களின் நலன்கள் குறித்தும் அவர்கள் அக்கறைப்படவில்லை.

இந்த நிலையைச் சரி செய்வதற்கு தமிழ்த் தலைவைர்கள் முன்வைத்த எந்தக் கோரிக்கையையும் பிரிட்டிஷார் தாம் கையளித்த இலங்கை என்கிற நாட்டில் உள்ளடக்கவில்லை என்பதே இங்குள்ள பிர்ச்சினை. பிரிட்டிஷார் வெளியேறியதும் அதிகாரம் தமது கைகளில் உள்ளதைப் பயன்படுத்தி சிங்களவர்கள் தமிழர்களை ஒடுக்கவும் ஓரங்கட்டவும் பார்த்ததுடன் இந்த நாடு தனிச் சிங்கள பௌத்தவர்களுக்கு மட்டுமேயானது என்கிற தேசியவாதத்தை அநாகரீக தர்மபால தலைமையில் உருவாக்கியபோது, தமிழர்களின் எதிர்ப்புக் கிளம்பத் தொடங்கியது. அன்றுமுதல் அது அரசியல் அதிகார போராட்டமாகி, ஆயுதப் போருமாகி உச்சம் பெற்றது.

ஆயுதப் போர் முடிவுக்கு வந்தபோதும் இந்த வரலாற்று அரசியல் போக்கைப் புறந்தள்ளும் பௌத்த சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையில் உள்ளது வெறும் பொருளாதாரப் பிரச்சினை என்ற வகையில் அதனைத் தொடர்ந்தும் கையாள முயல்வதே பிரச்சினைகளுக்குக் காரணம். தேசிய மக்கள் சக்தியும் அதே பாதையில்தான் பயணிக்கிறது. அதனாலேயே தமிழர்களின் கரிநாளும் தொடர்கின்றது. ஆட்சியாளர்கள் இதனைப் புரிந்துகொள்ளாத வரையில் மாற்றம் வராது.

# மாவை சேனாதிராஜா ஒரு நல்ல நண்பர்

## நீதி அரசர் விக்னேஸ்வரன் இரங்கல்





நான் முதன் முதலில் மாவையுடன் அறிமுகமானது 1979 ஆம் ஆண்டில். நான் அப்போது மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி சக மட்டக்களப்பு நீதிவானாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

என் நண்பர் சட்டத்தரணி மு.சிவசிதம்பரம் ஒருவழக்கில் ஆஜரானார்.

'சேர்! இவர் மாவை சேனாதிராஜா. அவர் காசி ஆனந்தன்' சந்தேக நபர்கள் மற்றவர்களையும் மன்றுக்கு அறிமுகப்படுத்தினார். 'இவர்களை ஆதாரமில்லா குற்றச்சாட்டுக்களின் பேரில் ஒரு வருட காலத்திற்கு மேலாக சிறையில் அடைத்து வைத்துள்ளது அரசு. - என்றார்.

முக்கிய ஆவணங்கள் சிலபெறப்பட வேண்டியதால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய தாமதமாகியுள்ளது என்றார் அரச சட்டத்தரணி. பதியப்பட்ட ஆவணங்களை வாசித்துப் பார்த்தேன். 'நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட முதல் தினத்தில் இவர்கள் தங்கள் குற்றத்தை ஏற்றிருந்தால் இன்னும் சில மாதங்களில் இவர்கள் சிறையில் இருந்து விடுதலை அடைந்து வெளிவர வேண்டுமே! நீங்கள் குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கு ஆகக் கூடியதண்டனை இரண்டு வருட காலசிறைத் தண்டனை. இன்னமும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லையே. ஏன்?' என்றேன். இவர்கள் மிகவும் மோசமானவர்கள். புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று அரச சட்டத்தரணி கூறினார்.

நீங்கள் அவர்கள் பற்றி செய்யும் விமர்சனம் இருக்கட்டும். இன்னும் ஒரு மாத காலம் தருகின்றேன். அன்றைய தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும். இல்லையேல் அவர்களுக்குப் பிணை அளிக்கப்படும். - என்றேன்.

அடுத்த தவணை வழக்கு அழைக்கப்பட்ட போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. மதிய உணவின் பின்னர் குறித்த வழக்கில் எனது தீர்மானம் தரப்படும் என்று கூறி உரிய நேரத்தில் மதிய போசனத்திற்கு நீதிமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

மதிய உணவு இடைவேளையின்போது சிரேஷ்ட சட்டத்தரணியும் அப்போதிருந்த நீதிஅமைச்சர் தேவநாயகம் அவர்களின் சகோதரருமான தநவரட்ணராஜா அவர்கள் 10 - 12 சட்டத்தரணிகளுடன் என்னை வந்து என் தனியறையில் சந்தித்தார்.

'சேர்! இன்று மாவை சேனாதிராஜா வழக்கில் உங்கள் தீர்மானத்தைத் தர இருக்கின்றீர்கள். நீங்கள் ஓர் இளம் நீதிபதி. முதன் முதலாக இங்கு மட்டக்களப்புக்கே நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். வந்து சில மாதங்களே ஆகின்றன. மாவை சேனாதிராஜா, காசி ஆனந்தன் போன்றவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க நினைக்கும் பயங்கரவாதப் பேர் வழிகள்.

அவர்களுக்கு தயவு, தாட்சண்யம் காட்டக் கூடாது. உங்கள் வருங்கால நீதிபதி வாழ்க்கை நல்லாய் இருக்க வேண்டும் என்று தான் உங்களுக்கு அன்புடன் எங்கள் இந்தக் கருத்தைக் கூற வந்துள்ளோம்.

எந்த வகையிலும் அவர்களுக்கு பிணை அளிக்கப்படக் கூடாது. அளித்தால் விளைவுகள் நன்றாக இருக்கா' என்றார்.

நான் உடனே எழுந்து அவர்கள் ஒவ்வொருவருடனும் கைலாகு கொடுத்து, 'நீங்கள் யாவரும் எனது வருங்காலத்தை உத்தேசித்து எனக்கு அறிவுரை வழங்கியதற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி! நன்றி!' என்று கூறிவிட்டு வழியனுப்பினேன். மதிய இடைவேளைக்குப் பின் மன்று கூடிய போது அரச சட்டத்தரணியிடம் 'குற்றப் பத்திரிகை இன்று தாக்கல் செய்கின்றீர்களா?' என்று கேட்டேன். 'இல்லை' என்றார்.

நான் சென்ற தடவையே கூறியிருந்தேன். இன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாவிட்;டால்பிணை அளிப்பதாகக் கூறியிருந்தேன். நீங்கள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. ஆகவே சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் பிணை அளிக்கின்றேன்.

அரசானது குற்றப்பத்திரிகை பதிய ஆயத்துமானதும் சந்தேக நபர்களை மன்றுக்கு அழைக்கலாம்'

என்று கூறி பிணை விவரங்களை மன்றுக்குத் தெரியப்படுத்தினேன். குறித்த குற்றப் பத்திரிகை என்றுமே அதன் பின்னர் தாக்கல் செய்யப்படவில்லை. காரணம், கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகள் போலியானவை. ஐந்து வருடங்கள் மட்டக்களப்பில் தரித்து

நிற்க வேண்டிய நான் ஓரிரு வாரங்களில் சாவகச்சேரிக்கு வேண்டுமென்றே மாற்றப் பட்டேன்.

அதன்பின்னர் பல இடங்களில் மாவையைச் சந்தித்துள்ளேன். என்றுமே அவர் என்னுடன் அன்புடனேயே பேசுவார். அவர் வெறும் தமிழ் இனவாதி அல்லாமல் தமிழ்த் தேசியத்தின் தூணாகவே எனக்குப் புலப்பட்டார். அரசியலுக்கு வந்த பின்னர் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எப்பொழுதுமம் ஒரு சகோதர வாஞ்சையுடனேயே அவர் என்னுடன்

பழகினார். எந்தக் காரணத்தினாலும் எமக்குள் மனக் கசப்பு ஏற்பட்டதில்லை. அவருக்குப் பதிலாக என்னைத் சம்பந்தன் அவர்கள் வடமாகாண முதலமைச்சராக வர கட்சிக்கு அறிமுகப்படுத்தியதால் மாவை சற்று மனவருத்தப்பட்டார். அவரின் நிலை பற்றி அறிந்தபின் எனக்கும் மனவருத்தந்தான். தனது 16 அல்லது 17 ஆவது வயதில் அரசியலுக்குள் காலடி எடுத்துவைத்தவர் மாவை. கட்சிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் விஸ்வாசமாக நடந்து கொண்டவர். பல போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டவர். நல்ல பேச்சாளர். அவர் முதலமைச்சராக வர ஆசைப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் சூழல் என்னை முதலமைச்சர் ஆக்கியது. ஒரு கட்சி அன்பர் என்னிடம் 'ஐயா! நீங்கள் மாவையின் இடத்தைப் பறித்துவிட்டீர்களே!' - என்றார்.

தயவு செய்து இது பற்றி என்னுடன் பேசாதீர்கள். சம்பந்தனிடம் இது பற்றிக் கேளுங்கள். - என்றேன். நான் ஆறு மாதங்களுக்கு மேலாக அரசியல் எனக்கு வேண்டாம் என்று தவிர்த்துக் கொண்டு வந்திருந்தேன். சம்பந்தன், ஆனந்தசங்கரி, சிறிதரன், சித்தார்த்தன், பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், மனோகணேசன்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

## மாவை...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

போன்ற பலர் என் இல்லம் தேடி வந்து வற்புறுத்தியதாலேயே நான் தேர்தலில் நிற்க ஒப்புக் கொண்டேன். மாவைக்கு முதலமைச்சராக வர ஆசை இருந்தது என்பது பற்றி உண்மையில் எனக்கொன்றும் அப்போது தெரியாது.

சம்பந்தன் அவர்கள் தன் உறவினரான வித்தியாதரனையே முதலமைச்சராக்க நினைத்திருந்தார் என்று தான் எனக்குக்கூறப்பட்டது. எனினும் குறித்த அன்பர் சம்பந்தனிடம் போய் 'ஏன் மாவையைத் தவிர்த்து விக்னேஸ்வரனை முதலமைச்சர் ஆக்கினார்கள்

என்று கேட்டிருக்கின்றார். நான் அறிந்த வரையில் சம்பந்தன் அவர்கள் பின்வருமாறு அவருக்குப்பதில் அளித்திருந்தார்.

நாம் யாவரும் சமமானவர்களே என்று நாங்கள் தவறாக நினைக்கின்றோம். சட்டத்தின் முன் நாம் யாவரும் சமமே. ஆனால் அதன் அர்த்தம் சட்டம் யாவருக்கும் சம உரிமைகளைக் கொடுக்கின்றது. அதற்காக யாவரும் சமம் என்று

கொள்ள முடியாது. ஒரு வைத்தியரும் ஒரு கமக்காரனும் சட்டத்தின் முன் சமமேஎன்பதால் வைத்தியரை விவசாயம் செய்யச் சொல்லியோ, கமக்காரரை மருத்துவம் செய்யச் சொல்லியோ கேட்க

முடியாது; கேட்கக் கூடாது.

மாவை ஒரு பேரணியின் முன்னின்று அதனை வழிநடத்திச் செல்லக்கூடியவர். கட்சிக்கு விஸ்வாசமானவர். ஆனால் முதலமைச்சர் பதவிக்கென்று பல கடமைகள் உள்ளன. அவற்றைச் செய்யக் கூடியவர் இவர் என்று தான் நாங்கள் விக்னேஸ்வரனை

அழைத்திருந்தோம் என்று கூறியதாகக் கேள்வி.

இதன் காரணத்தால் எனக்கும் மாவைக்கும் இடையில் போட்டி பொறாமை என்று பத்திரிகைகள் கூறத் தலைப்பட்டிருந்தாலும் சகல விதங்களிலும் மாவை என்னுடன் மிகவும் அன்புடனும் பண்புடனுந்தான் நடந்து கொண்டார். என்னைப் பொறுத்த வரையில், நான் அறிந்த வகையில் மாவை சமரசத்தையும்

சமாதானத்தையுமே விரும்பினார்.

எமது கட்சியின் தேசியப் பெருவிழாவிற்கு சென்ற ஆண்டு

அழைத்த போது அவர் பார்வையாளர்களில் ஒருவராக வந்து முன் வரிசையில் இருந்து நிகழ்ச்சிகளை கடைசி வரையில் இருந்து கேட்டு இரசித்துச் சென்றார். எல்லா விதங்களிலும் எனக்கு உறுதுணையாகவே அவர் இருந்தார்.

அவரின் பிரிவு மனதில் ஓர் ஏக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. பழம்பெரும் தமிழ் அரசியல்வாதி ஒருவரை இழந்து நிற்கின்றோம்.

ஒரு நல்ல நண்பரை நான் இழந்துள்ளேன்! மாவையின் ஆத்மா இறைவனடி சேர்வதாக - என்றுள்ளது.

# முன்பள்ளிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள்

(சுபேசன்)

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் முன்பள்ளிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றது.



வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில்; வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் அ.அற்புதராஜா, வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.வீரசிங்கம்,வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் போல் அமல்ராஜ்,



வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன்,

முன்பள்ளி ஆசிரியர் சங்க பருத்தித்துறைக் கோட்டத் தலைவர் ச.பத்மலோஜினி, வட மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் சி.சிவரஞ்சினி, இலங்கைக் கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் பரந்தாமன் புலவன், சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன்,

வவுனியா தெற்கு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் தாட்சாஜினி,

வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ம.முரளிதரன், வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் ற.அஸ்லம், இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் இலண்டன் கிளைத் தலைவர் நவரட்ணம் மற்றும் இலண்டன் கிளை உறுப்பினர் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர்.



கருத்தமர்வு நிகழ்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் சிங்கள முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# ஆலங்குடாவில் சட்டவிரோதமாக கொண்டுவந்த மஞ்சள், காலணிகள் என்பன கைப்பற்றப்பட்டன

(சியாஜ்)

நுரைச்சோலை ஆலங்குடா கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி தேடுதல் நடவடிக்கையின் போது தீவுக்குள் சட்ட விரோதமாக கடத்த முயன்ற சுமார் 496 கிலோகிராம் உலர் மஞ்சல் மற்றும் 515 ஜோடி காலணிகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது டிங்கி படகு ஒன்றுடன்



02 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான பொருள்களின் ஊடுருவலைத் தடுப்பதற்காக தீவின் கரையோரப் பகுதிகளில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதே குறித்த பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கைவிஜயா கடற்படையின் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த





நடவடிக்கையின்போது 515 ஜோடி செருப்புகள் 16 உறைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்துடன் சுமார் 496 கிலோ எடையுள்ள உலர் இஞ்சி 06 பொதிகளில் மறைக்கப்பட்டிருந்தன எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த கடத்தல் நடவடிக்கைக்காக பயன்படுத்தப் பட்ட டிங்கி படகு மற்றும் அதனுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் கற்பிட்டி கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33 மற்றும் 46 வயதுடைய கற்பிட்டியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02 சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட

# இஞ்சி மூடைகளுடன் நால்வர் கண்டல்குடாவில் மாட்டினர்

(சியாஜ்)

இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக இஞ்சி மூடைகளை கடத்திச் செல்வதாக கற்பிட்டி பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத்தகவலுக்கமைய சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து பள்ளிவாசல்துறைப் பகுதியில் இஞ்சி மூடைகளை கடத்திச் செல்ல உளவு பார்த்துச் சென்ற மோட்டார் சைக்கிளை மறித்து கைது செய்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது லொறியில் கடத்தி வருவதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். இதனையடுத்து கற்பிட்டி சம்மட்டிவாடி கடற்கரைப் பகுதியிலிருந்து கொழும்பிற்கு கடத்திச் செல்ல முற்பட்டபோது கண்டல்குடா எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக குறித்த லொறிய மறித்து சோதனையில் ஈடுபட்டபோது இஞ்சி மூடைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 45 உரைகள் அடங்கிய 1839 கிலோகிராம் இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு புத்தளம் மற்றும் மதுரங்குளி பகுதிகளைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இஞ்சி மூடைகளை ஏற்றிச் சென்ற லொறியையும் உளவு பார்க்கச் சென்ற மோட்டார் சைக்கிளும் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட இஞ்சி மூடைகள் 90 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியென மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரையும் கைப்பற்றிய இஞ்சி மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை கட்டுநாயக்க சுங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

# அல்ஹிலால் பாடசாலையின் வித்தியாரம்பம்

(ஸாகிர்)

சாய்ந்தமருது கமு/கமு/அல் ஹிலால் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்;கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா பாடசாலையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில், பாடசாலையில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாலை அணிவித்து புதிதாக அனுமதி பெற்ற தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரியுமான எம்.எம்.ஏ.மலீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, கௌரவ அதிதியாக பாடசாலையின்



அபிவிருத்திக் குழுவின் செயலாளர் பொருளாளர் எம்.சீ. கமால் நிஸாத், முன்னாள் அதிபர் ஐ.எஸ்.ஏ. மஜீத் ஆகியோர் கலந்து கொண்டதோடு, நிகழ்வில் சிறப்பு அதிதியாக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.எம். அன்சார் கலந்து கொண்டார்.

பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள் மற்றும் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், தேசிய கீதம், பாடசாலை கீதம் இடம்பெற்றதுடன் அதிபர் உரை, மாணவர்கள் கலை நிகழ்வுகளும் அதிதிகளால் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு அறிவுரைகளும் சொல்லப்பட்டன.

தரம் ஒன்று மாணவர்களுக்கு அகரம் எழுதப்பழக்கியதோடு, இனிப்புகளும் வழங்கப்பட்டு, மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகளுக்கு நன்றி செலுத்தப்பட்டதுடன் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் அதிபர் யூ.எல்.நஸார் நன்றி தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.






# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் 'புனித புஹாரி செரீப்' பாராயணம்

(ஸாகிர்)

சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக ஓதப்பட்டு வந்த 'புனித புஹாரி செரீப்' பாராயணம் இம்முறையும் ஓதப்பட்டு சனிக்கிழமை மாலை இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷாதி) மற்றும் உலமாக்களால் தமாம் செய்து வைக்கப்பட்டது.



சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் பிரதித்தலைவர் எம்.எம்.எம். இஸ்மாயில் அவர்களின் நெறிப்படுத்தலில் செயலாளர் எம்.எம்.எம். றபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொறுப்பாளர் சபையின் பொருளாளர் ஏ.ஏ.சலீம் மற்றும் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், உலமாக்கள், உத்தியோகத்தர்கள், நிர்வாகிகள், ஜமா அத்தினர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

புனித புஹாரி சரீப் பாராயணம், கடந்த ஜனவரி 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, சுமார் ஒரு மாத காலமாக அதிகாலை வேளையில் ஊர் மக்கள், ஜமா அத்தினர்கள் மற்றும் தனவந்தர்களின் பங்களிப்புடன் ஓதப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் வெள்ள அழிவுகள் குறித்த மதிப்பீட்டுப் பணிகள் தொடங்கியுள்ளன

கிளிநொச்சியில் கால போகச் செய்கையில் ஏற்பட்ட வெள்ள அழிவுகள் குறித்த மதிப்பீட்டுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாவட்டப் பதில் செயலர் முரளிதரன் தெரிவித்தார்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள விவசாயிகளின் பயிரழிவு தொடர்பாக நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் அண்ணளவாக எழுபது ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருட இறுதி மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் நிலவிய சீரற்ற காலநிலையால் நெற்செய்கை அழிவு நிலைக்கு சென்றுள்ளன.

அந்தவகையில் மழைவீழ்ச்சி மற்றும் சீரற்ற காலநிலையால் எமது மாவட்டத்தின் பெரிய குளமான இரணைமடுகுளம் நான்கு அல்லது ஐந்து தடவைகளுக்கு மேல் வான்பாய்ந்திருந்தது. இதன் காரணமாக நெற் செய்கை பெரிதும் பாதிப்படைந்தது.

இந்நிலையில் இதனை மதிப்பிடும் முகமாக கமநல காப்புறுதி சபை, பிரதேச செயகம், விவசாயத் திணைக்களம் ஆகிய இணைந்து பணிகளை ஆரம்பித்திருக்கின்றன.

இவை நேர அட்டவணையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே மழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி குறித்த குழுவினருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 316



## ரவிகரன் எம்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஐயங்கன் குளத்தில் 21 குடும்பங்களுக்கு, பழையமுறிகண்டியில்04குடும்பங்களுக்கும், புதுத்துவெட்டுவான் பகுதியில் 12 குடும்பங்களுக்கும், கல்விளான் பகுதியில் 15 குடும்பங்களுக்கும், தென்னியன்குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், கோட்டைகட்டியகுளம் பகுதியில் 05குடும்பங்களுக்கும், அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், அமதிபுரம் பகுதியில் 07 குடும்பங்களுக்கும், துணுக்காய்பகுதியில்08குடும்பங்களுக்குமாக மொத்தம் 255 குடும்பங்கள் துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவிலே சொந்தக் காணிகள் இல்லை.

இந்நிலையில்முல்லைத்தீவுமாவட்டத்தின் பலபகுதிகளிலும்படையினராலும்,வனஇலாகா, வன உயிரிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச இயந்திரங்களால் மக்களினுடைய காணிகள் அதிகளவில் அபகரிக்கப்பட்டிருப்பதற்கான புள்ளிவிவரங்கள் எம்மிடமுள்ளன. இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள இந்தக் காணிகள் மீட்கப்பட்டு இவ்வாறு வலிந்து காணிகள் இல்லாமல்செய்யப்பட்ட மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

குறிப்பாக வன இலாகா மக்களிடமோ, கிராம அலுவலர், பிரதேச செயலாளர், மாவட்ட செயலர் எவருடனும் தொடர்புகொள்ளாமல், அறிவித்தல் வழங்கப்படாமலேயே இவ்வாறு மக்களின் காணிகளில் எல்லைக்கற்கள் இடுகின்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இனி இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

வன்னிப் பகுதிகளில் நீண்டகாலமாக இடம்பெற்ற போர் காரணமாக தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், நீண்ட காலத்திற்குப் பின்னரே தமது இடங்களில் மீளக்குடியேறியுள்ளனர். அந்த மக்கள் இடப்பெயர்விற்கு முன்னர் வாழ்ந்த குடியிருப்புக் காணிகள், நெற்செய்கைக் காணிகள், மேட்டுப்பயிர்ச்செய்கைக்காணிகள் உள்ளிட்ட அனைத்துக் காணிகளும் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறுபற்றைக்காடுகளாகக்காணப்படும் மக்களின் காணிகளையே வன இலாகா, வனஜீவராசிகள்திணைக்களம்உள்ளிட்டஅரச திணைக்களங்கள் எந்த அறிவிப்புக்களையும் செய்யாது தமது எல்லைக்கற்களை இட்டு ஆக்கிரமிப்புச் செய்கின்றன.

இவ்வாறு மக்களின் காணிகளை ஆக்கிரமிப்புச்செய்கின்றதிணைக்களங்களைச் சார்ந்தவர்கள்இவ்வாறானபிரதேசஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு வருவதில்லை. இந்த அபகரிப்பாளர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டும். இவ்வாறானவர்களின் செயற்பாடுளை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றன. எனவே இந்த இந்தவிடயத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில்முறையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006ஏக்கர், 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும்எல்லைக்கல்லிட்டு4,35000 ஏக்கர்காணிகள் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

நிலம்தான் எமது உரிமை, நிலம் இல்லையேல் எதுவுமில்லை. அவ்வாறிருக்க எமது மக்களின் காணிகள் அனைத்தையும் அபகரிப்புச்செய்தால்,எமதுமக்கள்காணியின்றி தெருவிலா இருப்பது - என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு - மாந்தைகிழக்குபிரதேசசெயலர்பிரிவிற்குட்பட்ட துவரங்குளம் மற்றும், அக்குளத்தின் கீழான வயல் நிலங்களையும் மக்களிடம் கையளிக்கும்விடயத்தில்நீதிமன்றம்உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்மாந்தைகிழக்குப்பிரதேசஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதனைச் சுட்டிக்காட்டினார்.

குறித்த துவரங்குளத்தின் கீழுள்ள வயல்காணிகளில்பயிர்ச்செய்கையில்ஈடுபட்ட 63விவசாயிகளுக்கெதிராககடந்தஒருவருடத்துக்குமுன்னர்வனவளத்திணைக்களத்தினால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

மங்குளம் நீதிமன்றில் இடம்பெற்ற இந்த வழக்கில், துவரங்குளம் மற்றும், இக்குளத்தின் கீழான வயல் நிலங்கள் எமது மக்களுக்கு உரியவை எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து வனவளத் திணைக்களத்தினால் வழக்குத்தொடரப்பட்ட விவசாயிகள் விடுவிக்கப்பட்டதுடன், இந்த விடயத்தில் பிரதேசசெயலகமும், வனவளத் திணைக்களமும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளுமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

ஒருவருடத்திற்கு மேலாகியுள்ளபோதிலும் இந்த விடயம் தொடர்பில் இருதரப்புக்களும் தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்து வயல் காணிகளையும், குளத்தையும் மக்களிடம் கையளிக்க இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்தவிடயத்தில் நீதிமன்றத்தினுடைய கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றேசொல்லவேண்டியுள்ளது.மக்களுக்குரிய இந்த வயல்நிலங்களும், குளமும் அந்த மக்களிடமே கையளிக்கப்படவேண்டும். தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்த ஆளும்தரப்பு இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.






# சம்மாந்துறையில் ஆறு பேர் ஒரே தடவையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம்



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையைச் சேர்ந்த இருவர் அகில இலங்கை (முழுத்தீவுக்குமான) சமாதான நீதிவானாகவும், நால்வர் மாவட்ட சமாதான நீதிவானாக கல்முனை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி கௌரவ ஏ.எம்.முஹம்மது றியால் முன்னிலையில் (2025.01.23, 2025.01.30 ஆம் திகதி) மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

முன்னாள் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராதா ஜயரத்ன அவர்களின் சிபாரிசின் கீழ் றிசாத் அன்ட் பிரதர்ஸ் அமைப்பின் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க அகில இலங்கை சமாதான நீதிவானாக இருவரும், மாவட்ட சமாதான நீதிவானாக நால்வரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, அகில இலங்கை ( முழுத்தீவுக்குமான) சமாதான நீதிவானாக எம்.எச்.றாசியா உடங்கா 01 ஐச் சேர்ந்தவர். சம்மாந்துறை சபூர் வித்தியாலயத்தின் ஆசிரியர், அகில இலங்கை (முழுத்தீவுக்குமான) சமாதான நீதிவானாக ஏ.கே. முகம்மட் காலித் உடங்கா 01 ஐச் சேர்ந்தவர். முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர், மாவட்ட சமாதான நீதிவானாக கே.எம். சஹூதுன் நஜ்ஜாஸ் கருவாட்டுக்கல் 03 ஐச் சேர்ந்தவர். ஓய்வு பெற்ற சம்மாந்துறை வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் (சுகாதாரம் உடற்கல்வி) மற்றும் றிசாத் அன்ட் பிரதர்ஸ் அமைப்பின் ஆலோசகர், மாவட்ட சமாதான நீதிவானாக ஏஎம். சபீக் விளினியடி 03 ஐச் சேர்ந்தவர். கல்முனை பிரதேச செயலக தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர், மாவட்ட சமாதான நீதிவானாக எம்.டி. அப்துல் றஹ்மான் கருவாட்டுக்கல் 03 ஐச் சேர்ந்தவர். றிசாத் அன்ட் பிரதர்ஸ் அமைப்பின் உறுப்பினர், மாவட்ட சமாதான நீதிவானாக எஸ். பைசர்கான் சம்மாந்துறை 10 ஐச் சேர்ந்தவர். சம்மாந்துறை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தர் போன்றவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்றொழில் அமைச்சரின் இலங்கை சுதந்திரதின செய்தி

கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் சுதந்திர தின செய்தி

' வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் இலங்கை அடைந்து, நாட்டின் உண்மையான சுதந்திரம் மலர ஓரணியில் திரள்வோம்.' -

என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

'தேசிய மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம்' எனும் மகுடத்தின் கீழ் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடத்துகின்றது.

இம்முறை மக்களுக்கு முன்னுரிமை வழங்கியும் சுதந்திரதின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. செலவுகள் குறைக்கப்பட்டு, தேவையற்ற ஏற்பாடுகள் தவிர்க்கப்பட்டிருந்தாலும் சுதந்திர தினத்துக்குரிய கம்பீரமும், அபிமானமும் குறையாதவகையில் அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெறும்.

காலணித்துவ ஆட்சியிலிருந்து எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றிருந்தாலும் எமது நாட்டை மாறி, மாறி ஆண்ட தரப்புகளிடமிருந்து மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெறவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

அதனால்தான் 76 வருடகால சாபத்துக்கு முடிவுகட்டி, மக்களால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்உருவாக்கப்பட்டது. எனவே, எமது ஆட்சியின் கீழ் உண்மையான சுதந்திரம் என்றால் என்னவென்பதை மக்கள் உணர்வார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் தான் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்ககூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எமது ஆட்சியில் நடைபெறும் முதலாவது சுதந்திரம்



இதுவென்பதுடன், சுதந்திர தினம் என்பது மக்களுக்கானது என்பதும் இம்முறையே உறுதியாகியுள்ளது.

இன, மத, மொழி, குல பேதங்களுக்கு அப்பால் அனைத்து இன மக்களும் ஓரணியில்திரண்ட சூழ்நிலையில் கொண்டாடப்படும் சுதந்திரம் இதுவென்பது நிச்சயம் இந்நாள் வரலாற்றில் இடம்பிடிக்கும்.

வடக்கு, கிழக்கு, மலையகம் என நாட்டில் வாழும் அனைத்து பிரஜைகளும் சமமாகவும், சமத்துவத்துடனும் நடத்தப்படுவார்கள். - என்றுள்ளது.

## ஐஸ் போதைப் பொருள் விற்ற சந்தேகத்தில் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து ஐஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த ஐஸ் போதைப் பொருளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்புத் தரவை 01 பகுதியில் இக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 37 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 770 மில்லிகிராம் மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேடி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. நஸார் தலைமையிலான குழுவினர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த களப்பணி

## காரைதீவில் அதிரடி

(நூருல் ஹுதா உமர்)

டெங்குநுளம்பைகட்டுப்படுத்திபிரதேசமக்களை ஆபத்திலிருந்து மீட்க கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் அவர்களின் தலைமையில் கொள்கலன் சேகரிப்பு நிகழ்வு காரைதீவு மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நேற்று (திங்கட்கிழமை)நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், சுற்றாடல் கழக மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள் நுளம்பு பெருகும் இடங்களை பரிசோதனை செய்து நுளம்பு பெருகும் பொருள்களை பிரதேச சபை ஊழியர்களால் அகற்றப்பட்டன.





# யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் திறப்பு

தேசிய மக்கள் சக்தியின் மேலும் ஒரு பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் ஞாயிற்றுக்கிழமையாழ்ப்பாணம் கோப்பாய் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், எஸ்.ஸ்ரீ. பவானந்தராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், கட்சி உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

மக்களின் நலன் கருதி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கல்முனை மாநகர சபையின் 'கிளீன் சிறிலங்கா' வேலைகள் சாய்ந்தமருதில் சனியன்று ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி தலைமையில் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் ஆரம்பமானது. இதன் முதல் கட்டமாக சாய்ந்தமருதில் இவ் வேலைத்திட்டம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டு திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றப்பட்டதுடன் கடற்கரை பிரதேசமும் சுத்தம் செய்யப்பட்டன.





இவ்வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா, உதவி ஆணையாளர் ஏ.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எம்.ஜௌசி உள்ளிட்ட மாநகர சபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி இதன் போது நன்றிகளை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர சபைக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் இவ் வேலைத்திட்டம் தொடராக முன்னெடுக்கப்படும் எனவும் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி மேலும் தெரிவித்தார்.

# வசதி குறைந்த பாடசாலை மாணவருக்கு பாடசாலை பாதணிகள் வழங்கி வைப்பு






(பாறுக் ஷிஹான்)

கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்துக்குமான சபையின் ஏற்பாட்டில் சனிக்கிழமை வசதி குறைந்த 80 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைக்கான பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனைமையோன்மாவத்தையில் அமைந்துள்ள மையோன்ப்ளாஷாதிருமணமண்டபத்தில் கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்துக்குமான சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி யு.எம். நிசார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன் அமைப்பின் செயலாளர் ஏ.எஸ்.ஏ.மஜீட், உப தலைவர் மௌலவி இசட்.எம். நதிர், பொருளாளர் எம்.ரி.எம். நயீம், கணக்காய்வாளர் ஏ.எம்.எம். முஸ்தக்கீம், உதவிச் செயலாளர் எஸ்.எம். ஹாஜா ஆகியோர் உள்ளிட்ட அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2025இல் வெளியிடப்பெற்றது